



துணை முதலமைச்சரும், திராவிட முன்னேற்றக் கழக இளைஞரணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (16.10.2025) சென்னை எழும்பூர், வேப்பேரி பெரியார் திடலில், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் 1,100 தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் ப. தாயகம் கவி, இ.பரந்தாமன், வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல் உள்பட பல்வேறு சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் தூய்மை பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

## சென்னை எனும் குழந்தையை தினந்தோறும் சீராட்டும் தாய்மார்கள்:

# தூய்மைப் பணியாளர்களின் பணி மிகவும் போற்றத்தக்கது:

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நெகிழ்ச்சி!

***சென்னை,அக்.18-***

***சென்னை எழும்பூரில் நடைபெற்ற விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பேரிடர் காலங்கள் தொடங்கி, எப்போதும் சென்னை மாநகரின் தூய்மைக்குத் துணைநிற்கும் தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.***

***அப்போது அவர், ``சென்னை என்ற குழந்தையை தினமும் வேலைக்கு அனுப்பி, விளையாட அனுப்பி அது வீட்டுக்கு வந்தவுடன் குளிக்க வைக்கின்ற தாய்மார்கள் இங்கு வந்திருக்கக் கூடிய தூய்மைப் பணியாளர்களாகிய நீங்கள்தான். அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த இந்த தூய்மைப் பணியாளர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில், எனக்கு மிகுந்த பெருமையை நான் தேடிக் கொள்கிறேன்'' என்று குறிப்பிட்டார்.***

***துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:***





*இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வதில் மிகுந்த பெருமையாகக் கருதுகிறேன். அதற்கு என்ன காரணம் என்றால், இது சென்னை கிழக்கு மாவட்டத்தில் நடைபெறுகிற நிகழ்ச்சி என்பதால் மட்டுமல்ல, சமுதாயத்தில் தன் வாழ்நாள் முழுவதும் தூய்மைப் பணியில் ஈடுபட்ட தந்தை பெரியார் திடலில், தூய்மைப் பணியாளர்களைச் சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற்றமைக்குப் பெருமையாகக் கருதுகிறேன்.*

*நிகழ்ச்சியைச் சிறப்பாக ஏற்பாடு செய்து என்னை அழைத்து வந்த சகோதரி, உங்களின் மேயர் பிரியா அவர்களுக்கு இந்த நேரத்தில் எனது வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் பல நிகழ்ச்சிகளை அவர் நடத்த வேண்டும். அண்ணன் சேகர்பாபு அவர்கள் பேசும் போது சொன்னார். இன்றைக்கு சகோதரி பிரியா அவர்கள் இந்த நிகழ்ச்சி மட்டுமல்ல, பரிசு கிடையாது இது உங்களின் கடமை, இது உங்களின் உரிமை. இந்த நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்து இரவு உணவு ஏற்பாடு செய்திருக்கிறார்.*

*நாடாளுமன்ற உறுப்பினர் அண்ணன் தயாநிதி மாறன் அவர்கள் இந்தத் தொகுதி முழுவதும் இருக்கக்கூடிய அனைத்து தூய்மைப் பணியாளர்களையும் வைத்து நிகழ்ச்சி நடத்த வேண்டும். பெருமைப்படுத்த வேண்டும் என்று சொன்னார். நான் அவரிடத்தில் சொல்லிக் கொள்வதெல்லாம் மேயர் பிரியா அவர்கள் இந்தத் தொகுதிக்கு மட்டும் மேயர் கிடையாது, ஒட்டுமொத்த சென்னை மாநகராட்சிக்கும் அவர் மேயர். சென்னை மாநகராட்சியில் இருக்கக்கூடிய அனைத்து தூய்மைப் பணியாளர்களையும் அழைத்து, என்னையும் அழைத்து இதேபோல பல நிகழ்ச்சிகளை அவர் நடத்த வேண்டும்.*

*உங்களின் பணி*

*தூய்மைப் பணியாளர்களான உங்களின் பணி மிகவும் போற்றத்தக்கது. அதுவும் குறிப்பாக மழைக் காலங்களில், கோவிட் காலங்களில் உங்களின் உழைப்பு யாராலும் அளவிட முடியாதது. களத்தில் எங்கள் எல்லோருக்கும் முன், எங்களுக்கு தைரியம் சொல்லி களத்தில் இறங்கி தூய்மைப் பணியில் ஈடுபட்டவர்கள் நீங்கதான்.*

*குறிப்பாக மழைக்காலங்களில் அண்ணன் சேகர் பாபு, நான், சட்டமன்ற உறுப்பினர்கள், மேயர் பிரியா நள்ளிரவு 2 மணி, 3 மணிக்கு அதிகமாக மழை பெய்கிறது. களத்துக்குச் சென்று, எங்கு தண்ணீர் தேங்கி நிற்கிறது என்று பார்ப்போம். அங்கு பணிகளை எல்லாம் முடுக்கிவிடுவோம்னு என்று நினைத்து சென்று பார்த்தோம் என்றால், அங்கு எங்களுக்கு முன் களத்தில் பணிகளை மேற்கொள்ள ஆரம்பித்திருப்பது யார் என்று பார்த்தீர்கள் என்றால், இங்கு வந்திருக்கக்கூடிய தூய்மைப் பணியாளர்களான நீங்கள்தான்.*

**மிகுந்த பெருமை**

*நம் வீட்டில் ஒரு 5 வயது குழந்தை இருக்கிறது என்றால், காலையில் எழுந்து வீட்டில் இருக்காது. அது விளையாட போய்விடும். அந்த அழுக்கிலும், மண்ணிலும் புரண்டு விளையாடிவிட்டு, திரும்பி வீட்டுக்கு வரும்போது அந்த குழந்தையின் தாய் எவ்வளவு கோபம் வந்தாலும் அந்தக் குழந்தையை அடிக்க மாட்டார்கள். முதலில் அந்தக் குழந்தையைக் குளிக்க வைப்பார்கள். அதுபோல சென்னை என்ற அந்தக் குழந்தையை தினமும் வேலைக்கு அனுப்பி, விளையாட அனுப்பி அது வீட்டுக்கு வந்தவுடன் குளிக்க வைக்கின்ற தாய்மார்கள் இங்கு வந்திருக்கக்கூடிய நீங்கள்தான். அப்படிப்பட்ட பெருமைவாய்ந்த இந்த தூய்மைப் பணியாளர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் எனக்கு மிகுந்த பெருமையை நான் தேடிக் கொள்கிறேன்.*

*எனவே இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த அண்ணன் சேகர் பாபு அவர்களுக்கும், சகோதரி பிரியா அவர்களுக்கும் மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, வந்திருக்கும் உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய வணக்கங்களைத் தெரிவித்து விடை பெறுகிறேன்.*

*இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.*

**பங்கேற்றவர்கள்**

*அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம்கவி, இல.பரந்தாமன், ஜோசப் சாமுவேல், வெற்றியழகன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ரவிச்சந்திரன், அணிகளின் மாநில நிர்வாகிகள் தமிழன் பிரசன்னா, யாழினி, பரிதி இளம்சுருதி, பகுதி கழகச் செயலாளர்கள் வேலு, சுதாகர், சரிதா மகேஷ்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வான வில் விஜய் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.*

### தூய்மைப் பணியாளர்கள் 1100 பேருக்கு நல உதவிகள்!

**சென்னை பாரிமுனையில் சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் நடைபெற்ற விழாவில் தூய்மைப் பணியாளர்கள் 1100 பேருக்கு வழங்கப்பட்ட நல உதவிகள் வருமாறு:**

**1. அரிசி தலா 10 கிலோ, 2. வேட்டி, சட்டை, பேண்ட், 3. பெட்ஷீட், சுவீட், காரம், 4. பாத்திரம் தலா ஒரு செட், 5. தலா ரூ. 2500 உதவி, 6. அசைவ விருந்து, 7. பட்டாசு ஆகியவை மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில் சென்னை மாநகராட்சி மேயர் பிரியா தலைமையில் வழங்கப்பட்டது.**

---



அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம், ஆண்டிமடம் ஊராட்சியில் தமிழ்நாடு தீயணைப்பு மீட்புப் பணிகள் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு (ம) மீட்புப் பணிகள் நிலையத்தினை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்து, தீயணைப்பு துறை வாகனத்தின் செயல்பாட்டினை கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, க.சொ.க.கண்ணன் எம்.எல்.ஏ. மற்றும் பலர் உள்ளனர்.

## ஜெயங்கொண்டம் தொகுதியில்

# இரண்டு அறைகள் கொண்ட ஆய்வு மாளிகை கட்டப்படுமா?

## சட்டப்பேரவையில் க.சொ.க.கண்ணன் கேள்வி!

*சென்னை, அக். 18-*

*சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது ஜெயங்கொண்டம் க.சொ.க.கண்ணன் கேட்ட கேள்வியும் அக்கேள்விக்கு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அளித்த பதிலும் வருமாறு:-*

**க.சொ.க.கண்ணன்:** *எனது ஜெயங்கொண்டம் தொகுதியில், ஜெயங் கொண்டம் நகரில், நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான, ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட, நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான ஓட்டு கட்டடம் உள்ளது, ஆய்வு மாளிகையாக உள்ளது. அந்த ஆய்வு மாளிகை கடந்த ஆண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வருகை தந்துள்ளபோது, நம்முடைய அமைச்சர் அவர்கள் அதை சீரமைத்துத் தந்தார்கள். இருந்தாலும், அதிலே ஒரு அறைதான் உள்ளது. அங்கே ஜெயங் கொண்டம் பகுதியிலே, மாமன்னர் இராஜேந்திர*



*சோழன் கட்டமைத்த பிரகதீஸ்வரர் ஆலயம் மற்றும் பல்வேறு சுற்றுலா தலங்கள் உள்ளதால், அடிக்கடி ஜெயங்கொண்டம் பகுதிக்கு அரசு அதிகாரிகளும், முக்கிய பிரமுகர்களும் வரக்கூடிய சூழ்நிலை உள்ளதால், கூடுதலாக நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான இடத்தில், இரண்டு அறைகள் கொண்ட ஆய்வு மாளிகையைக் கட்டித்தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக கேட்டு அமர்கிறேன்.*

**அமைச்சர் எ.வ.வேலு:** *உறுப்பினர் அவர்கள் சொல்கிற அந்தச் சுற்றுலா மாளிகை என்பது, ஏற்கெனவே பிரிட்டிஷ்காரர் காலத்திலே கட்டப்பட்டு, ரொம்ப மோசமான நிலையில் இருந்தது. யாரும் தங்க முடியாத நிலையில்கூட இருந்தது அது. ஒருமுறை முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கழக வளர்ச்சிக்காக நான் நாடகம் போடுகிற போது அந்த ஊரிலே நாடகம் போட்டேன். அந்தச் சுற்றுலா மாளிகையிலே நானே அதிலே தங்கியிருக்கிறேன். ஆனால், இப்படி இருக்கிறது. ஆனால், அந்தச் சுற்றுலா மாளிகை பிரிட்டிஷ்காரர் காலத்தில் கட்டப்பட்ட மாளிகையாக இருந்தாலும், இப்போதெல்லாம் 100 ஆண்டுகாலம் முடிந்தால் ICONIC PROJECT என்று எடுத்து நாம் செய்கிறோம். அதுமாதிரி நீங்கள் செய்யுங்கள் என்றார். அதற்கு அதனடிப்படையிலே அதற்காக பணமும் ஒதுக்கித் தந்தார்கள். அதற்கு பின்னால், அந்த ஒரு அறை என்பது VIPக்குரிய அறை. அதனால் இன்னும் 2 அறைகள் நாங்கள் அதைத் தயார் செய்தோம். இப்போது அது INTERNATIONAL STANDARDல் இருக்கிறது, இப்போது அந்த சுற்றுலா மாளிகை. ஆனால், ஒரு அறை இல்லை. ஒரு VIP அறை ஒன்றிருக்கிறது. அது இல்லாமல் 2 அறைகளும், அதிலே ஏற்கெனவே நாங்கள் ஏற்பாடு செய்திருக்கிறோம். ஆக, 3 அறைகள் இருக்கின்றன. அந்தப் பகுதிக்கு அது போதுமானது தான். ஆனாலும், புதிய ஒரு சுற்றுலா மாளிகை வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். நான் முதலமைச்சர் அவர்களிடம் கலந்து பேசி, அடுத்த நிதியாண்டிலே, அதை செய்ய முடியுமா என்று ஆலோசித்து முடிவெடுக்கப்படும்.*

*இவ்வாறு விவாதம் நடைபெற்றது.*